பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஹு சித்திரை மீ 12 உ. வியாழக்கிழமை [25-04-1991] UTHAYAN—A Lively National Tamil Daily ஒளி: 142

# திட்டமிட்டபடி படையினர் முன்னேற முடியவில்லை

## ஹெலி சுற்றியது

யாழ்ப்பாணம், ஏப். 25

நேற்று நண்பகல் யாழ் நகரையும் அதனை அண்டிய பகுதிகளையும் ஹெலி ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது.

இதனால் நகரப் பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டது.

நகரப் பரீட்சை மண்டபங்களிலும் பரபரப்பு ஏற்பட்டது. [உ-5-15]

## தாண்டிக்குளத்தில் சூடு! 6 பொதுமக்கள் காயம்!!

யாழ்ப்பாணம், ஏப். 25

வவுனியா தாண்டிக்குளம் காவல் அரண் பகுதியில் வைத்து நேற்றுக் காலை 9.45 மணியளவில் 'புளொட்' குழுவினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஆறு பொதுமக்கள் காயமடைந்தனர்.

அவர்கள் ஆறு பேரும் வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம்—

கடந்த திங்களன்று வவுனியா நகருக்குச் சென்ற குணம் மீனா, நாகராஜா குமரன் ஆகிய இருவரையும் புளொட் குழுவினர் கைது செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. அவர்கள் இருவரும் நேற்று வரை விடுவிக்கப்படவில்லை. [உ-3]

## கிழக்கிற்குப் பொறுப்பாக புதிய ராணுவத் தளபதி

கிழக்கு மாகாணத்தில் முழு இராணுவ நடவடிக்கைகளுக்கும் பொறுப்பான தளபதியாக மேஜர் ஜெனரல் சிசில் வைத்திய ரத்னா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கிழக்கு மாகாணத்தை இராணுவத்தினர் தமது பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரும் ஒரு நடவடிக்கையாக இந்த நியமனம் செய்யப்பட்டிருப்பதாக சண்டே ஐலண்ட் தெரிவித்திருக்கிறது. [உ-எ]

## ஈழப் போராட்டத்துக்கு தி. மு. க. ஆதரவளிக்கும்!

### தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிப்பு

இலங்கைத் தமிழ்ப் போராளிகள் நடத்தும் உரிமைப் போராட்டத்தை தி. மு. க. ஆதரிக்கும்.

ஆனால் இப் போராளிகளின் சட்டவிரோத நடவடிக்கைகள் தமிழக மண்ணில் இடம் பெறுவதை தி. மு. க ஆதரிக்காது.

தி. மு. க. நேற்று வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் தீர்வு குறித்து தி மு க. தொடர்ந்து மத்திய அரசுக்கு நெருக்குதல் கொடுக்கும்—என்றும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. [ஒ-எ-3]

## தோப்பூரில் திடீர் தாக்கு; 5 படையினர் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 25

திருகோணமலை மாவட்டம் தோப்பூர் பகுதியில் நேற்றுக்காலை 9. 20 மணியளவில் ஜீப்பில் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் தாக்குதலில் ஐந்து படையினர் உயிரிழந்தனர்.

தோப்பூர் இராணுவ முகாமிலிருந்து சேருவில இராணுவ முகாமுக்குச் சென்று கொண்டிருந்த படையினர் மீது செல்வா நகர்ப் பகுதியில் வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

தாக்குதலினால் படையினரின் ஜீப் முற்றாகச் சேதமடைந்தது.

இந்தத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளினால் ரி 56 - 2 ரகத் துப்பாக்கிகள் -2, மகஸின் - 8, ரி 56 - 1 ரசத் துப்பாக்கி - 1, ஐ எம். ரவைகள் - 240 என்பன மீட்கப்பட்டன. புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது

## 3 சிப்பாய்கள் உயிரிழப்பு

அனுராதபுரம் மாவட்டம் ஹொரவப் பொத்தானைப் பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் ஒன்றில் 3 சிப்பாய்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை அனுராதபுரம் மாவட்டத்தில் நடந்த தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்று ஏஜென்சிச் செய்தி ஒன்று தெரிவித்தது. [ஒ-எ-3]

## துருப்புக்களின் மனோபலம் குன்றிவிட்டது ஸ்ரீலங்கா தளபதி ஹமில்டன் கூறுகிறார்

கொழும்பு, ஏப்ரல் 25

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்க அரசுக்குத் தயாரித்துக் கொடுத்த திட்டத்தின்படி படையினரால் முன்னேற முடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை —

படையினரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பினும் அவர்களின் மனோதிடம் மற்றும் திறமை குன்றியிருப்பதை தரைத் தளபதிகள் (Ground Commanders) கண்டுபிடித்துத் தமது கவனத்துக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று ஜெனரல் வணசிங்க தெரிவித்திருக்கிறார்.

''சண்டே ரைம்ஸ்'' அரசியல் செய்தியாளர் இத்தகவலை வெளியிட்டிருகிறார்.

இருக்கும் ஆயுதப்படையினரை வைத்துக்கொண்டே வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும்படி இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவுக்கு அரசு மேலிடம் கூறிவிட்டதாகவும் அவர் தமது கட்டுரையில் தகவல் வெளியிட்டிருக்கிறார்.

இராணுவ நடவடிக்கைகள் தொடர்பான தமது உத்தேச திட்டம் குறித்து கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி இராணுவத் தளபதி ஜெனரல் வணசிங்க விளக்கமான அறிக்கை ஒன்றை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவிடம் சமர்ப்பித்திருந்தார்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்த அரசியல் ரீதியான ஆதரவையும் அவர் கோரியிருந்தார்.

அந்தத் திட்டத்தின்படி, கடந்த மார்ச் மாதத்தில் படையினர் கிழக்கு மாகா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கல்வி நிர்வாக சேவை தரம் 3 பரீட்சை ஒத்திவைப்பு?

கொழும்பு, ஏப். 25

இலங்கை கல்வி நிர்வாகச் சேவையின் மூன்றாம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை பின்போடப்பட்டிருப்பதாக அறியவந்தது.

இந்தப் பரீட்சை இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அரசப்பாட நெறி பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசித் தினம் இம் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தற்சமயம் அறிவிக்கப்பட்டுள்ளது

விண்ணப்ப முடிவு தினம் ஏப்ரல் 30 ஆம் திகதிக்கு நீடிக்கப்பட்டிருப்பதால் பரீட்சையும் அதற்குப் பின்னர் ஒரு திகதியில் நடைபெறுவதற்கு ஒத்திப்போடப்படலாம் எனக் கருதப்படுகிறது. [உ-3]

## வெடிகுண்டுகள் பறிமுதல்!

கொழும்பு, ஏப். 25

கொழும்புத் துறைமுகத்துக்கு அண்மையில் வந்த பெல்ஜியம் கப்பலில் இருந்து கைப்பற்றப்பட்ட மோட்டார் வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களை பறிமுதல் செய்யுமாறு சுங்கத் திணைக்களம் உத்தரவிட்டுள்ளது. [ஒ-3]

## ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஏப். 25

நேற்று நண்பகல் 12-30 மணியளவில் வல்லை, மண்டான் பகுதிகளில் ஹெலி ஒன்று வேட்டுக்களைத் தீர்த்தது. [உ]

## முச்சந்தி முரளி



அப்ப...மாஜி மந்திரிக்கு [illegible]

## காமினி வந்தபோது காத்திருந்த ஆயுதக்குழு!

முன்னாள் அமைச்சர் காமினி திசநாயக்கா, வெளிநாட்டிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் வந்திறங்கியபோது அங்கே ஆயுதம் தரித்த குழு ஒன்று காத்திருந்ததாம்.

கடந்த வியாழன் நள்ளிரவு அவர் கட்டுநாயக்காவை வந்தடைந்தபோது. அங்கு இரண்டு பஜரோ ஜீப்களில் அந்த ஆயுதம் தரித்த குழு வந்து காத்து நின்றதாம்.

எனினும் அதுபற்றிய தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, திரு காமினி திசநாயக்காவின் தனிப்பட்ட மெய்ப்பாதுகாவலர்கள் உஷார் அடைந்து திரு. திசநாயக்காவைப் பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. [அ-எ]

## தந்தையைச் சாடுகிறார் ஜே. ஆரின் மகன் ரவி!

கொழும்பு, ஏப். 25

இலங்கை முன்னேறாமல் இருப்பதற்குத் தமது தந்தை உட்பட அரசியல் வாதிகளே காரணம் என்று முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா கூறியிருக்கிறார்.

இலங்கைக்கு இந்தியப் படையை அழைப்பதால் பாதகங்கள் விளையும் என்று தாம் கூறியதை முதலில் உணரத் தவறிய தமது தந்தை பின்னர் உணர்ந்து கொண்டார் என்றும் அவர் சாடினார்.

''சண்டே ரைம்ஸ்'' பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## மேதின ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல்

காலம்: 27-04 1991 — சனிக்கிழமை
காலை 9-30 மணி.

இடம்: சங்க தலைமைக் காரியாலயம்

சங்கக் கிளைக் குழு உறுப்பினர்கள், மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

சி. சிவமகாராசா,
தலைவர்.

தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

[இ/5132]

## அந்தியேஷ்டிக் கிரியையும் சபிண்டீகரணமும்



### அமரர் சரோஜினி ஞானபண்டிதன்

அவர்கள்
[சரோ]
[சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு]

மலர்வு: 10 02 - 1956
உதிர்வு: 28 - 03 - 1991

ஆத்மீகம் சிறக்கும் ஆம்பதி கருணை
சுத்தாத் துவிதத் தூய சைவ
இருமர புத்தூடய் இன்மர பாகிய
கார்தாத் த வேளான் காமரு மரபினோய்!
பார்புகழ் வள்ளலாய்ப் பராவுறு பெருங்குடி
மேதக உதித்த மேம்பாடு புகழினோய்
சாதனை மிக்க சட்டவல் லுநராம்
ஆதர வார்ந்த அருமா புதிதனை
சால்பு சிறக்கும் சட்டத்தரணியாய்
நூல்நுழை புலமெலாம் நுண்ணிதின் விளக்கினோய்!
குலத்து விளக்கெனக் குலவிய கொழுந்தே
அலக்கண் உறவிட் டகன்றனை விடுத்தே
இல்லற தீபமாய் இயங்கிடு நிற்கு
வல்லான் அமைத்த வகையிது வாகுதோ
இம்மை நீத்து இரந்தனை ஆயினும்
அம்மா நின்புகழ் அவனியில் நிலைக்கும்

அன்புடையீர்!

அமரர் சரோஜினி ஞானபண்டிதன் அவர்களின் மேற்படி கிரியைகள் 27-04-1991 சனிக்கிழமை முற்பகல் 10-00 மணியளவில் கொழும்பில் நடைபெற உள்ளன. அக்கிரியைகளிற் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

★ அவ்வமயம் உடுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்திலும் மு. ப 9-00 மணியளவில் அவரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தங்கள் அன்புள்ள அன்னாரின் நாயகர்:
சின்னத்துரை ஞானபண்டிதன்,
தாயார்: மரகதவல்லி கணபதிப்பிள்ளை,
குடும்பத்தினரும்.

இல: 6, ஹெவன் கடுவ பிளேஸ்,
OFF - 1ஆவது ஷப்பல் லேன்,
வெள்ளவத்தை,
கொழும்பு.

[16582]

### வர்த்தகரின் குடும்பத்துக்கு நிதி உதவி

தென்மராட்சி, ஏப்ரல் 25

இந்திய இராணுவ நடவடிக்கையின் போது கொல்லப்பட்ட வர்த்தகர் ஒருவரின் குடும்பத்திற்கு சாவகச்சேரி வர்த்தகர் சங்கத்தினர் ரூபா 30 ஆயிரம் நன்கொடையாக வழங்கினர்

வி. எஸ் செல்வராசா என்பவரின் குடும்பத்திற்கே இந்த நிதியுதவி வழங்கப்பட்டது.

[இ-117]

### தமிழ்க் கலைஞரின் வீட்டுப் பிரச்சினை

கொழும்பு, ஏப்ரல் 25

தமிழ்க் கலைஞர்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கும்படி வீட்டுவசதி அமைச்சர் சிறிசேனகூரேக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக அமைச்சரைச் சந்தித்து பேச இந்து சமய துணை அமைச்சர் பி. பி. தேவராஜ் தீர்மானித்து இருக்கிறார். [இ-எ]

### பூநகரியில் அஞ்சலி

பூநகரி, ஏப்ரல் 25

மன்னார் அடம்பனில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த ஸ்ரீபனுக்கு [தம்பையா உமாபதிசிவம்] அஞ்சலி செலுத்தும் முகமாக பூநகரி வர்த்தகர் கடைகளை மூடி துக்கம் அனுஷ்டித்தனர்.

ஸ்ரீபனின் புகழுடம்பு சந்தை மண்டபத்தில மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது.

பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு மலர்களால் அஞ்சலி செலுத்தினார்கள். பூநகரி சர்வோதய இயக்கத்தினர் மௌனமும் சாத்தி அஞ்சலி செலுத்தினார்கள்.

பூநகரிப் பிரதேச வட்ட அவைத் தலைவர் திரு கே. ரீ. புவனேந்திரன் தலைமையில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. [இ - 135]

### மரம் நடுகையில் ஆய்வு நிறுவனம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

மரம் நடுகைத் திட்டத்திற்கென மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் முயற்சிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

வாகை, என்புருக்கி, கொக்குமந்தாரை, திருக்கொன்றல் போன்ற மரங்களின் விதைகளை சேகரிக்க வசதியுள்ள பொதுமக்கள் இதனை தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் கொடுத்துதவுமாறு வேண்டப்படுகின்றனர். [இ]

### கல்வி அலுவலக ஊழியருக்கு சவர்க்காரம்

யாழ். கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியர்களுக்கு நேற்று நியாய விலையில் சவர்க்காரம், தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணெய் ஆகியன விநியோகிக்கப்பட்டன.

கொழும்பிலிருந்து கல்விப் பணிப்பாளரினால் எடுத்து வரப்பட்ட பொருள்களே நேற்று ஊழியர்களுக்கு வழங்கப்பட்டன. [இ-5]

### சுக்ளா இ. காங்கிரஸ் பட்டியலில்

முன்னாள் வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்ளா, பிரபல நடிகர் சுனில் தத் ஆகியோர் இந்திரா காங்கிரஸ் நேற்று வெளியிட்ட மூன்றாவது லோகசபை வேட்பாளர்

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி அ. கமலாதேவி (B. A.)

[அபிவிருத்தி உத்தியோகஸ்தர்]

தோற்றம்: 03 - 01 - 1948
மறைவு: 15 - 04 - 1981

எங்கள் குடும்பத்தின் ஞானவிளக்காக, அன்பூற்றாக விளங்கி அபிவிருத்தி உத்தியோகஸ்தராக, சமூக பொருளாதார மாதர் குல முன்னேற்றத்திற்கும் அரும்பணி ஆற்றிய திருமதி கமலாதேவி (B A) நாம் கதறிக் கலங்கும்படி சடுதியில் சிவகதி அடைந்து ஆண்டு பத்து கடந்துள்ளன. வேதனையில் உழலும் எங்களிதயங்களில் அன்னாரின் தரிசனம் கணம்தோறும் கிடைத்த திலும் நாம் செலுத்தி வரும் கண்ணீர் அஞ்சலியை நினைவு கூர்ந்து கண்ணீரோடு சிரம் தாழ்த்துகின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்,
தாயார், சகோதரன், மைத்துனி மருமகன்
மருமகள், சகோதரர்கள், சகோதரிகள்,
சிறிய தந்தையர்கள், சிறிய தாய்மார்கள்,
மாமன்மார், மாமிமார், மச்சான்மார்,
மச்சாள்மார்.

''அக்கா அகம்''
இணுவில்.

[16589]

## மரண அறிவித்தல்கள்

### செல்வி லூட்ஸ் சியாமினா

செல்வி லூட்ஸ் சியாமினா பரமநாயகம் [மாணவி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி ஆண்டு 4] காலமாகி விட்டார். இவர் பரமநாயகம் [மெற்றிக் தச்சுத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்] டெஸ்மலர் ஆகியோரின் அருமைப் புதல்வியும், றோஜர்ரகிபேட் [யாழ் இந்துக் கல்லூரி], ஸ்ரீவ்டெமிற்றியஸ், டெறிக் சாந்தகுமார் ஆகியோரின் சகோதரியுமாவார். இவரின் இறுதிச்சடங்குகள் 25-04-91 இன்று பி. ப 4 மணிக்குஇளவாலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்
சு. பிலேந்திரராசா

சென் அன்ரனிஸ் வீதி,
பண்டத்தரிப்பு.

[16596]

### நாகமணி சின்னத்துரை

சரவணையைப் பிறப்பிடமாகவும் வேலணையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சின்னத்துரை காலமாகிவிட்டார்.

அன்னார் நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், தில்லைக்காந்தன் [ஜேர்மனி], ஜெயகாந்தன் [ஜெயா பென்சி ஈலூஸ் நவீனசந்தை யாழ்.], வதனகாந்தன் [காந்தன் பென்சி ஈலூஸ் யாழ்.], திருமதி பேரின்பவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா, இரத்தினஸ்ரீ, குமாரி, மகேந்திரன் [குமாரி வீடியோ சென்ரர் வேலணை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

இறுதிக் கிரிகை அன்னாரின் இல்லத்தில் இன்று மாலை 3 மணியளவில் நடைபெற்று தகனக்கிரிகைக்காக வேலணை மேற்கு அம்பலவி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மகேந்திரன்
[மருமகன்]

[16519]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியூர் தபால் அனுப்ப சென்ற மக்கள் ஏமாற்றம்!

''லில்லி - லில்லி'' கப்பல் யாழ்ப்பாணக் குடாநாட்டில் அஞ்சலிடப்பட்ட கடிதங்களுடன் நேற்றுப் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றது.

ஆனால் பல பொதுமக்கள் தமது தபால்களை உரிய நேரத்தில் சேர்க்க முடியாமல் ஏமாற்றத்துக்கு உள்ளாக வேண்டியதாயிற்று.

''லில்லி - லில்லி'' இன்று வியாழக்கிழமை புறப்படும் எனக் கருதி, வெளியூர்க் கடிதங்களை நேற்று [புதன்] நண்பகல் 12 மணிக்கு முன்னர் யாழ். பிரதம தபாலகத்தில் சேர்க்குமாறு தபால் அதிகாரிகள் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்திருந்தனர்.

அதனை நம்பி, பல பொது மக்கள் நேற்று கடிதங்களுடன் பிரதம தபாலகத்துக்குச் சென்றபோது, கடிதங்கள் ஏற்கனவே கப்பலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாகவும், இனி எதுவும் செய்யமுடியாது என்றும் தபாலகத்தில் ஊழியர்கள் கையை விரித்தனர்!

திட்டமிட்டதற்கு முன்னரே கப்பல் புறப்பட்டதால் தபால் அதிகாரிகளின் அறிவிப்பை நம்பிச்சென்ற பொது மக்கள் ஏமாற்றம் அடைய வேண்டியதாயிற்று! [அ]

## சித்திரத் தேர் வெள்ளோட்டம்

திருநெல்வேலி, அரசடி அருள்மிகு ஸ்ரீசிவகாமசுந்தரி அம்பாள் ஆலயத்தின் நவகோண வடிவமான சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா நாளை 26 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு நடைபெறும்.

ஈழத்திலேயேமுதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட நவகோண வடிவமான இந்த சித்திரத்தேரை சித்திராசிரியர் செல்வன் பத்மநாதன் சுரேந்திரன் குழுவினர் உருவாக்கி இருந்தனர் [இ]


# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

[கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்]

91 மீட்டல்
SAT., & SUN.
ஆரம்பம்: 28-04-91
[காலை 8-00 மணி]

எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழு:-

| | |
|---|---|
| பொருளியல் | திரு. கலாகரன் |
| வர்த்தகம் | திரு. தேவராஜா |
| கணக்கியல் | திரு. வன்னியசிங்கம் |
| அளவையியல் | திரு. சுப்பிரமணியம் |
| இந்து நாகரீகம், இந்து சமயம் | திரு காரை சுந்தரம்பிள்ளை |
| தமிழ் | திரு. குழந்தை |
| புவியியல் | திரு. குணராஜா |
| சரித்திரம் | திரு. விஜயன் |

மு. குறிப்பு:-
i அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.
ii கலை, வர்த்தக வகுப்புகளிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

[இ-4844]



# கம்பியூட்டர் பயிற்சி

மானிப்பாயில் IDP யின் சேவை ஆரம்பம்:

★ IDP யின் யாழ். தலைமையகமும் மல்லாகக் கிளையும்
மானிப்பாய்க்கு
இடம் மாற்றப்பட்டுள்ளன.

BASIC, D-BASE - III + COURSES

● புதிய பிரிவுகள் ஆரம்பம்: 28-04-1991
[Weekday & Weekend Batches]

● விண்ணப்ப முடிவு திகதி: 27-04-1991

குறிக்கப்பட்ட முதல் பதிவுகளுக்கு 10% கழிவு கொடுக்கப்படும்

Managing Director — K. THALAYASINGAM
Administrator — T. CHANDRAKUMAR

IDP Computer Centre
MANIPAY ROAD, MANIPAY.
[மானிப்பாய் ஆஸ்பத்திரிக்கு சமீபாகவுள்ள மேல்மாடி]
★ SPOKEN ENGLISH வகுப்புகளும் நடைபெறும்.
[C-...]


# கிளிநொச்சியில் நோயாளர்கள் ஏமாற்றத்துடன் திரும்பும் அவலம்

## டாக்டர்கள், தாதிகள் பற்றாக்குறை

கிளிநொச்சி, ஏப்ரல் 25

கிளிநொச்சி அரசினர் மருத்துவமனையில் வைத்தியர்கள், தாதிகள், சிற்றூழியர் பற்றாக்குறையினால் வெளிநோயாளர் பிரிவில் தினமும் ஏராளமான நோயாளர் சிகிச்சை பெறமுடியாமல் திரும்பிச் செல்கிறார்கள். இதேபோல் வார்ட்டுகளில் உள்ள நோயாளர்களும் ஒழுங்காக பராமரிக்கப்படுவது இல்லை.

ஆறு வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய இந்த மருத்துவ மனையில் 2 வைத்தியர்களே தற்போது நிரந்தரமாக பணியாற்றுகின்றார்கள். இதேவேளை செஞ்சிலுவைச் சங்கத்தினால் தற்காலிகமாக இரு டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

பதினைந்து தாதிகள் பணியாற்றவேண்டிய போதிலும் 6 தாதிகளே தற்போது கடமையில் உள்ளனர். இதேபோல் சிற்றூழியர்களின் எண்ணிக்கையும் தேவையை விடக் குறைவாகவே உள்ளது.

தினமும் வெளிநோயாளர் பகுதிக்கு 200 க்கு மேற்பட்ட நோயாளர்கள் வருகின்றார்கள். இவர்களில் 100 நோயாளர்கள் மட்டுமே பார்வையிடப்படுகிறார்கள் மீதிப் பேர் திரும்பிச் செல்கின்றார்கள்.

இதேவேளை தொய்வு நோய்க்கு மருந்து இல்லாததால் தொய்வு நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர். [இ-76]

## குமண கப்பலில் மண்ணெண்ணெய்

கொழும்பு, ஏப். 25

குமண கப்பல் மூலம் அடுத்த சில தினங்களில் 450 பரல் மண்ணெண்ணெய் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட இருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. [இ எ]

## சுன்னாகத்தில் உலர் உணவு விநியோகம்

மயிலணி, ஏப்ரல் 25

சுன்னாகம் பல நோ. கூ. சங்கத்தில் நேற்று முதல் இடம்பெயர்ந்தோருக்கான இலவச உலர் உணவு வழங்கப்படுகிறது. இவர்களுக்கான விநியோகம் முடிவடைந்த பின்னரே சுன்னாகம் மக்களுக்கான விநியோகம் ஆரம்பமாகும். [இ 89]

## மலேசிய வாசி கைது

கொழும்பு, ஏப். 25

கசினோ சூதாட்டங்களை நடத்தி வந்ததற்காக நாடு கடத்தப்பட்ட ஜோ சிம் என்பவரின் தரகர் எனக் கருதப்படும் மலேசியப் பிரசைக் காரர் ஒருவரை இரகசியப் பொலீஸார் கைதுசெய்தனர்,

தாய் லாய் குவான் என்ற பிரஸ்தாப நபர் ஜோ சிமின் சார்பில் பல கசினோ கழகங்களைச் சட்ட விரோதமாக நடத்தினார் எனப் பொலீஸார் கண்டுபிடித்தனர்.

நாடுகடத்தப்படும் பொருட்டு குவான் குடிவரவு வெளியேற்றப் பகுதியிடம் ஒப்படைக்கப்பட்டார் [அ]

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஏப். 25

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்கள் எதிர்வரும் மேதின நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது தொடர்பான கலந்துரையாடல்கள் இன்று காலை 10-00 மணிக்கு யாழ். மாநகர சபை, நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்கள் இந்த கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்துள்ளன.

அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெறவுள்ள இக்கலந்துரையாடல்களில் அவ்வப்பகுதிச் சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களும், சமாச அங்கத்தவர்களும், பாலர் பாடசாலை ஆசிரியைகளும், அமைப்புக்களும் தவறாது பங்கு பற்றும் வண்ணம் யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார். [இ-30]


## 30th Death Anniversary of Rev. Fr. T. M. F. LONG O. M. I.

A Requiem High Mass will be offered on Tuesday 30th April 1991 at 6-30 a m in the College Chapel, followed by a Memorial Meeting and tea in the O B. A. premises.

All old boys and well wishers are cordially invited.

Rev. Fr. G. A. F. Joseph,
President,
St. Patrick's College O. B. A, Jaffna.

[சி/5130]



## இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை

தமிழ், ஆங்கில, தட்டச்சு, சுருக்கெழுத்து பாடநெறி

மேற்படி பாடநெறி இலவசமாக இருநேரம்/பகுதி நேரம் நடாத்தப்படும்.

1 விரும்பும் மாணவர்கள் விண்ணப்பிக்கவும்.
2 தகைமையுள்ள ஆசிரியர்கள் விண்ணப்பிக்கவும் தகைமைக்கேற்ற வேதனம் வழங்கப்படும்
3 தமிழ், ஆங்கில தட்டச்சுக்கள் உடனே தேவை. இவை விற்பனைக்கு இருப்பின் விலை, அதன் விவரங்கள் ஆகியன அனுப்பி வைக்கவும்.
4 தட்டச்சு திருத்துனருக்கு தனித்தனி தட்டச்சு திருத்துவதற்கு வேதனம் வழங்கப்படும்.

07 05 - 1991 க்கு முன் வரும் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

கௌரவ செயலாளர்.

செஞ்சிலுவைச்சங்கம்,
யாழ்ப்பாணக்கிளை,
73, கண்டி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[C/5133]



## பயிற்சிப் பத்திரிகையாளர்

பயிற்சிப் பத்திரிகையாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பத்திரிகையாளராகப் பணி செய்வதையே தமது நிரந்தரத் தொழிலாகக் கொள்ளும் ஆவலும், ஆர்வமும் உள்ளவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

பத்திரிகைத் துறையில் ஈடுபாடும் அதிக நாட்டமும் இருப்பதோடு நடப்பியல் விவகாரங்களை அறிவதில் விசேட ஆர்வமும், திறமையும் அவசியமான தகைமைகள்.

★ ஜி. சி. ஈ. [உயர்தர] பரீட்சையில் நான்கு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
★ வயதெல்லை 20 முதல் 25 வரை
★ ஜி. சி. ஈ சாதாரண தரத்தில் ஆகக் குறைந்தது தமிழில் திறமைச் சித்தியும், ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருக்க வேண்டும்.
★ வெளிக்கள வேலைகளைச் சலிக்காது செய்யக் கூடிய தேகாரோக்கியமும், அதற்கான விருப்பமும் தேவை.
★ மதுபானம் அருந்துதல், புகைத்தல் மற்றும் தீய பழக்கங்கள் உடையோர் விரும்பப்பட மாட்டார்கள்.
★ நற்குணமும் மற்றவர்களுடன் பண்பாகப் பழகும் தன்மையும், சுறுசுறுப்பும் மேலதிகத் தகைமைகளாகக் கருதப்படும்.

பூரணமான சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் கல்வித் தகைமை அத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் நற்சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து அனுப்பவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 30 - 04 - 1991

முகாமையாளர் (ஆளணி),
உதயன் வெளியீட்டகம்,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

ஆரம்பசுகாதாரவழிகாட்டி பேராசிரியர் த. இராமதாசன் F. R. C. P., D C. H. [குழந்தை வைத்தியத்துறை, மருத்துவபீடம்] எழுதியது. கல்லூரி, நூலகங்கள் மற்றும் முதலுதவிபோன்ற அனைத்து சுகாதாரப் பகுதியினர்களுக்கும் ஓர் அரிய புத்தகம். வெளியீடு: உதயன் வெளியீட்டகம், விற்பனை: பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

[இ-4828]

நீமியா உரத்தை யூரியாவுடன் கலந்து பாவிப்பதால் பயிருக்குச் சிறந்த அடிக்கட்டு உரமாகிறது. வாய்க்கால் நீரில் கழுவப்பட்டோ அன்றி நீராவியாக மாறியோ யூரியாவின் சக்தி விரயமாகாமல் தடுக்கிறது. நீமியா உரம். ஒரு கிலோ பக்கெற் ரூ 9-00 மட்டுமே. மில்க்வைற், யாழ்ப்பாணம். [C/5126]

**மலிவு விற்பனை**
**CLEARENCE SALE**

20-4-91 முதல் 30-4-91 வரை A/L, O/L ஆண்டு 5 (புலமைப் பரிசில் பரீட்சை) வகுப்புகளுக்கான Tutes மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes 58 A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [16484]

**மணமகள் தேவை**

பார்மசி மனேச்சராகக் கடமையாற்றும் 38 வயது மணமகனுக்கு படித்த, அழகான மணப்பெண் தேவை. ஜாதக் குறிப்புடன் தொடர்பு கொள்ளவும்: எஸ். எம். இராசதுரை இல- 103, கோவில் வீதி, நல்லூர்.

[16581]

**மணப்பெண் தேவை**

யாழ்ப்பாணம் கத்தோலிக்க குற்றமற்ற கனடாவில் நிரந்தர வேலையான I C. M. A. 30 வயது மணமகனுக்கு மணப்பெண் தேவை. கத்தோலிக்கரல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

[16575]

**மணப்பெண்கள் தேவை**

யாழ்ப்பாண இந்து 30 வயது (அத்தம் நட்சத்திரம்) எக்கவுண்டனுக்கும், 33 வயது [ரோகினி நட்சத்திரம்] எக்கவுண்டனுக்கும் 32 வயது மாக்கெற்றில் சித்தியடைந்தவருக்கும், செவ்வாய்க் குற்றமுள்ள 31 வயது மெக்கானிக்கல் என்ஜினியருக்கும் மணப்பெண்கள் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம்.

[16576]

**தவறிவிட்டது**

செ. மனோகரராணி ஆகிய எனது கைப்பை 3-4-1991 இல் சங்குப்பிட்டி-கேரதீவுக் கிடையில் தவறிவிட்டது. அதனுள் 567701972V இலக்கத்தையுடைய அடையாள அட்டை, காற்சங்கிலி என்பன உள்ளன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

[16583]

சி. சிவலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும் (613191992V) பேர்சும் யாழ். பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 396, சிவா அலங்கார நிலையம், கண்டி வீதி, மாம்பழம்சந்தி என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16585]

# விற்பனைக்கு

''அத்வைதமும் சாயி அவதாரமும்'' என்ற நூல் ரூபா 22/-க்கு யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தக சாலையில் விற்பனையாகிறது. வேதாந்தம், சித்தாந்தம், மறுபிறப்பு, பக்தி கர்மம், ஞானம் பற்றிய கருத்துகளும் சாயி பகவானின் சில பேச்சுகளின் தமிழ் வடிவங்களும் இந்நூலில் காணப்படுகின்றன.

[16570]

# கம்பியூட்டர் கல்வி

★ **Computer Programming in Mathematics**

A/L கணிதத் துறையில் சித்தி அடைந்தவர்கள் மட்டும் சேரலாம்.

ஆரம்பம்: 27-04-1991 3-00 p.m.

கணித, பொறியியல் துறையில் பயிலவிருக்கும் மாணவர்களுக்கான விசேட பாடத்திட்டம்

மேலதி விவரங்களுக்கு:




**UNIKCO COMPUTER CENTRE**
37, Clock Tower Road, JAFFNA.

(சி-4901)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் S.V. பொன்னுத்துரை [நவம்]**
(ஓய்வுபெற்ற P.W.D ஓவசியர்)

தோற்றம்: 02 - 08 - 1914 மறைவு: 25 - 04 - 1989

தூரத்தை அறிந்ததில்லை
துன்பத்தை புரிந்ததில்லை
வேதனையை உணர்ந்ததில்லை
இவையெல்லாம் உங்கள் பிரிவால்
வந்ததுவே இன்று எமக்கு.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, மக்கள், மருமகன்.

290, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். [16578]

# வலிகாமம் பகுதிக்கான மேதின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

மேதினத்தை முன்னிட்டு உழைக்கும் மக்களை கௌரவிக்க தமிழீழ ஆய்வு நிறுவனம் நடத்திய போட்டிகளில் - வலிகாமம் பகுதிக்கான- போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு:-

**உழவுத் தொழில்**

1. தா. இராமநாதன் [ஆவரங்கால்], 2. பொ. திரு. பாலசிங்கம் [சங்குவேலி], 3. செ. சோமசுந்தரம் [சண்டிலிப்பாய்].

**பனை ஏறுதல்**

1. க இராஜன் [கந்தரோடை], 2 பொ. தனபாலசிங்கம் [சிராவி], 3. த தவராசா [சங்குவேலி].

**துலா மிதித்தல்**

1. வீ. தனபாசிங்கம், ச. செல்வராசா (கந்தரோடை), 2 நா. மகேசன், ஆ. கிருஷ்ணபிள்ளை [ஆவரங்கால்], 3 வே. சிவலிங்கம், இ. நகுலேஸ்வரன் [தொல்புரம்].

**கிடுகு பின்னல்**

1. இ. பொன்னம்பலம் [உடுவில்], 2. வை. கணபதிப்பிள்ளை [புத்தூர்] 3. மா. அண்ணாச்சாமி [ஆவரங்கால்].

**குட்டான் இழைத்தல்**

1 க. செல்லமுத்து [ஆவரங்கால்], 2 மு. கனகசிங்கம் [உடுவில்], 3 து ஜெயந்தினி [புத்தூர்].

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 10 — 10 — 1915



மறைவு: 28 — 04 — 1988

அமரர்

**ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை**
[குத்தியர்]

திதி: 25 - 04 - 1991

''சுதந்திரம்'' தேடும் விழுதைச் சுமந்ததால்
ஆலமரத்தையே அடியோடு சாய்த்தார்கள்
''விடுதலை வீரனை'' உற்பவித்த காரணத்தால்
உம்மை அழித்தார்கள்
''புலியின் தந்தை'' 'புலவின் மையம்''
என்றதால்... உம்மைக் கொன்று சரித்தார்கள்
மூன்று ஆண்டுகள் முடிந்தன
நிகழ்வும், நினைவும் நெஞ்சில் இருக்கும்.

என்றும் உங்கள் நினைவுடன்,
குடும்பத்தினர்

[4029]

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 22 - 05 - 1937

உதிர்வு: 06 - 05 - 1990

திதி: 25 — 04 — 1991

அமரர்

**நாகலிங்கம் சிவபாதசுந்தரம்**
(Formerly Deputy Director, Dept. of Buildings)

''அன்பின் இருப்பிடமாய்,
பண்பின் உறைவிடமாய்,
பாசத்தின் ஒளி விளக்காய்,
பதவியில் மேன்மையாய்,
இல்லறம் என்னும் நல்லறத்தை,
இனிதே நடத்தி திடீரென மறைந்த,
அன்புத் தெய்வத்தின் ஆன்மா சாந்தியடைய,
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்''

உங்கள் நினைவுடன் வாழும்:
மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

''ஜெயபதி''
உரும்பராய் தெற்கு,
உரும்பராய். [4037]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### அச்சமில்லாத ஆட்சிக்கு.....

எதிர்வரும் மேதினத்தை ஒட்டி கொழும்பில் இப்போதிருந்தே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன,

கொழும்பில் மே தினக் கொண்டாட்டங்கள் தொழிலாளர்களுக்கு உள்ள குறைபாடுகளை வெளிப்படுத்தும் வைபவங்களாக இருப்பதை விட, அரசியல் கட்சிகளுக்கு உள்ள ஆதரவை, பலத்தைக் காட்டும் கூட்டங்களாக விளங்குவதே வழக்கம்.

இம்முறை பலம் காட்டும் போட்டி மிகத் தீவிரமாகவே நடக்கும். ஏனெனில், மே தினம் வந்த பத்தாம் நாளில் தென்னிலங்கையில், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கப் போகின்றன. அரசியல் கட்சி ஒவ்வொன்றும் தனக்குள்ள மக்கள் ஆதரவைக் காட்டிக் கொள்வதற்கு மட்டும் அன்றி, தேர்தலுக்கு ஆதரவு திரட்டவும் மே தினக் கொண்டாட்டம் தக்கபடி பயன்படுத்தப்படும்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கூடுவதைச் சாதமாகப் பயன்படுத்தி, அரச விரோத சக்திகள் வன்செயலில் ஈடுபடலாம். குழப்பத்தை விளைவித்துத் தேர்தலைக் குழப்ப வழிசெய்யக் கூடும். அரசின் பாதுகாப்பு ஏற்பாடுகளை தோல்வியுறச் செய்யும் விதத்தில் குண்டுகளை வைத்து உயிர், உடைமை நாசத்தில் ஈடுபட்டு அரசாங்கம் பலவீனமானது என்பதைக் காட்டவும் கூடும்.

இவற்றை மனதில் வைத்தே அரசாங்கம் இப்போதிருந்தே கடுமையான சோதனைகளையும், முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளையும் செய்து வருகிறது போலும்!

தென்னிலங்கையில் உள்ள பிரச்சினைகள் எண்ணிலடங்காதவை பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் பூதாகாரமானவை.

தெற்கில் இப்போது அவசரகாலச் சட்டத்தில் சில விதிகள் மட்டும் தளர்த்தப்பட்ட போதிலும், இதுவரை அந்தப் போர்வையின் கீழ் தொழிற்சங்க உரிமைகள், மற்றும் பலவித உரிமைகள் நசுக்கப்பட்டிருந்தன. மனித உரிமை மீறல்களும் அங்கு நடந்தன.

இவை எல்லாவற்றையும் மூடி மறைக்கும் பென்னம் பெரிய கறுப்புத் திரைகளே தமிழர் பிரச்சினையும், வடக்கு-கிழக்கில் நடத்தப்படும் யுத்தமும், பதவியில் உள்ள இப்போதைய அரசாங்கம் மட்டுமன்றி, கொழும்பு அரசாங்கங்கள் எல்லாமே தென்னிலங்கைப் பிரச்சினைகளை மறைக்க தமிழர் விவகாரத்தையே பயன்படுத்தின.

தமிழர் பிரச்சினையைத் தீர்த்து விட்டால், உள்ளகப் பிரச்சினைகளுக்கு வெளிப்படையாக முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதால் அதனைத் தொடரச் செய்ய வேண்டும் என அரசியல் வாதிகள் இழுத்தடிக்கிறார்கள்.

தமிழர் பிரச்சினையைத் தீர்த்து, உள்ளகப் பிரச்சினைகளுக்கு நேரில் முகம் கொடுக்கப் பழகிவிட்டால், கொழும்பில் மே தினத்துக்கு முன்னோடியாக பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செய்ய வேண்டிய அவசியம் இருக்காது.

அவ்வாறான சூழ்நிலை உருவாகுவது எப்போது? தென்னிலங்கை அரசு எதுவானாலும் வன்செயல் குறித்து அச்சமின்றி ஆட்சி செய்வது எப்போது?

## மன்னார் ஆயர் மீது தாக்கு; கண்டி மாநாட்டில் ஆராய்வு

கொழும்பு, ஏப் 25

மன்னார் ஆயர் வண டாக்டர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆயுதபடையினரால் தாக்கப்பட்ட சம்பவம் குறித்து கண்டியில் கடந்த வியாழன் நடைபெற்ற ஆயர்கள் மாநாட்டில் ஆராயப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் மாநாட்டில் பரிசிலனை செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த காரணத்தினால் மன்னார் ஆயர் வண சவுந்தரநாயகம் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ]

## கருணாநிதி, ராஜீவ் நேற்று வேட்பு மனுத் தாக்கல்

சென்னை, ஏப். 25

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சென்னை - துறைமுகம் சட்டசபைத் தொகுதியில் நேற்று தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி உத்தரப் பிரதேசத்தில் அமேதி லோகசபைத் தொகுதியில் நேற்று தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். [உ-எ]

## தீர்வுக்கு மக்களிடமிருந்து ஆணை கேட்கிறார் பிரேமா!

கொழும்பு, ஏப் 25

ஐக்கிய இலங்கைக்குள் வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு எந்தவகையிலாவது ஒரு தீர்வைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது

அதற்கான அங்கீகாரத்தை மக்களிடமிருந்து உள்ளூராட்சித் தேர்தல்கள் மூலம் எதிர்பார்க்கிறேன்.

-இப்படி ஜனாதிபதி பிரேமதாஸா அண்மையில் ஐ. தே. க. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

நாட்டின் இறைமை ஐக்கியத்துக்கு பாதகமில்லாத வகையில் வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காணவேண்டியது அவசியமாகின்றது என்றும் அங்கு அவர் சொன்னார்.

## தமிழ் தொழிலாளர்கள் மீது சிங்களக் குண்டர்கள் தாக்கு

### ஒருவர் மரணம்; அறுவர் காயம்

கொழும்பு ஏப். 25

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மொனறாகலை மாவட்டத்தில் தெற்குப் பகுதியில் வைத்து தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சிங்களக் குண்டர்களால் தாக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அப்போது தமிழ்த் தோட்டத் தொழிலாளி ஒருவர் கொல்லப்பட்டார்; ஆறு தமிழ்த் தொழிலாளர்கள் காயமடைந்தனர். [ஒ-எ]

## தமிழ் அகதிப் பெண்கள்மீது படையினர் வன்முறை

திருகோணமலை கிளப்பன் பேர்க் அகதி முகாமில் தங்கியுள்ள தமிழ்ப் பெண்களை ஆயுதப் படையினர் வன்முறை பாவித்து தொல்லைக்கு உட்படுத்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் குறித்து கொழும்பில் நடந்த கூட்டம் ஒன்றில் பாதுகாப்புத் துணை அமைச்சுச் செயலாளர் வால்டர் பெர்னாண்டோவிடம் முறையிடப்பட்டதாகவும் —

அப்போது அவர் அச் சம்பவம் பற்றி விசாரணை செய்து நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார் என்று தெரிய வருகிறது. [ஒ-எ]

## பஞ்சாப், அஸாம் தேர்தல்; திகதிகள் நேற்று அறிவிப்பு

பஞ்சாப் மாநிலத்தில் எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதியும்—

அஸாம் மாநிலத்தில் ஜூன் 6 ஆம், 8 ஆம் திகதிகளிலும் சட்டசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்துவது என்று தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இதேவேளை— அகாலிதள் லோங்கோவால் பிரிவு பஞ்சாப் மாநிலத்தில் 117 சட்டசபை தொகுதிகளிலும் 13 லோகசபைத் தொகுதிகளிலும் போட்டியிடுவது என்று அறிவித்துள்ளது. [ஒ-எ]

## முரசொலியின் செய்தி சம்பந்தமாக

# வி. பு. மக்கள் முன்னணி அறிக்கை

''முரசொலி'' பத்திரிகையில் இம்மாதம் 10 ஆம் திகதி வெளிவந்த செய்தி சம்பந்தமாகத் தாம் நடத்திய விசாரணை, உண்மை நிலை வழங்கிய தீர்ப்பு என்பனவற்றை விளக்கி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:

10-04 1991 அன்று ''சிறுவன் மீது பாலியல் வன்முறை பிரயோகித்த பெண்கள்'' என்ற தலைப்பில் முரசொலி பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அந்தச் செய்தியில் சம்பந்தப்பட்ட பெண்கள் ஆசிரியைகள் என்று விவரிக்கப்பட்டிருந்தது.

இது உண்மைக்குப்புறம்பானது என்றும், குறித்த செய்திக்கு தம்மால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும் அதைக் கருத்திலெடுத்து பிரசுரிக்கத் தவறியதாலும் முரசொலி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும், வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரும் எம்மிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாம் செய்த விசாரணையின் முடிவில் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பற்ற விதத்திலும், அநாகரிகமாகவும் நடந்து பத்திரிகா தர்மத்தை மீறியுள்ளார் எனக் கண்டறிந்துள்ளோம்.

மாணவ - ஆசிரிய - பெற்றோர் உறவுச்சங்கிலியில் விகிரமான சந்தேகத்தை உருவாக்கியுள்ள இந்தச் செய்தி தொடர்பான தமது ஆட்சேபனையை 14 - 04 - 1991 அன்று வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும், வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினரும் முரசொலிக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இதேவேளை தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு மகாசிவமும் இந்தச் செய்தி தொடர்பான தங்களது அதிருப்தியை பத்திரிகைகளுக்கு விடுத்திருந்தார். இதையும் உடனடியாகக் கருத்திலெடுத்துப் பிரசுரிக்க முரசொலி தவறிவிட்டது.

முரசொலியின் இந்த அலட்சியப் போக்கானது ஆசிரிய சமூகத்தின் வெறுப்பை சம்பாதித்ததுடன் பத்திரிகை எரிப்புக்கும் வழிகோலியது. ஆனால், இந்த எரிப்பு நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

திரு. மகாசிவத்தினது கடிதத்தை 18-04 1991 அன்று ஈழநாதம் பத்திரிகை பிரசுரித்த மறுநாள் [19-04-1991] பிரதம ஆசிரியரது பதில் கருத்துடன் முரசொலியும் கடிதத்தைப் பிரசுரித்தது.

முரசொலி ஆசிரியரது பதில், குதர்க்க வாதங்களைக் கொண்டதாகவும் தங்களது தவறை நியாயப்படுத்தும் தன்மையுடையதாயுமே அமைந்திருந்தது.

குறித்த செய்தியில் தவறுகள் இருக்கின்றன என்பதை தெரிந்து கொண்ட நிலையிலும் தொடர்ந்தும் பொறுப்பற்ற விதத்தில் பொய்களையும், புனைகதைகளையும் முரசொலி ஆசிரியர் பிரசுரித்து வந்தார்.

சர்ச்சைக்குரிய அந்தச் செய்தி 10,11 13,18,19 ஆகிய திகதிகளில் புதிய தகவல்களுடனும், விளக்கங்களுடனும் மீண்டும் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பெண்களை முதலில் ஆசிரியைகள் என்றும், பின்னர் அவர்கள் ஆசிரியைகள் அல்லர் குறித்த சிறுவனுக்கு ரியூசன் கொடுத்த பெண்கள்தான் என்றும்;

அதன் பின்னர் அந்தப் பெண்கள் உயர்தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக [illegible] கள் என்றும்.

[illegible] பெரும் பழிக முடையவர்கள் என ஊகிக்கப்படுகிறது என்றும், பாதிக்கப்பட்ட சிறுவன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ் போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும், தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே தங்கி சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் செய்திகளை வெளியிட்டது: அத்துடன் தான் பிரசுரித்த செய்தியை மக்களும் நம்ப வேண்டும் என்பதற்காக விசேட நிருபர் ஒருவர் அனுப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன என்றும் எழுதியது.

உண்மையில் இவை அனைத்துமே பொய். அத்துடன் வக்கிர உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் புனையப்பட்ட கட்டுக்கதைகள் என எமது விசாரணை மூலம் தெளிவாகியுள்ளது.

உண்மை என்னவென்றால் குறித்த இளைஞன் உள வளர்ச்சி குன்றியவன். அதே சமயம் சம்பந்தப்பட்ட பெண்கள் என்பவர்கள் முறையே 12, 13, 15, 17 வயதினர் ஆவர். அதேவேளை முரசொலி பறைசாற்றியதைப் போல பாலியல் வன்முறை நடைபெறவில்லை.

முரசொலியின் மேற்குறித்த விடயங்கள் அனைத்துமே சமூகப் பொறுப்புணர்ச்சி உடைய பத்திரிகைகளுக்கு இருக்கக்கூடாதவை.

இத்தகைய குறைபாடுகள் அனைத்திற்கும் முரசொலியின் பிரதம ஆசிரியரே காரணம் ஆவார்.

பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டிய சமூக நோக்குகளையும், கடப்பாடுகளையும் அவர் புரிந்து கொண்டிருந்தும் தங்களுக்குள்ள சில சுயலாபங்களுக்காக செய்திகளை திரித்தும், மிகைப்படுத்தியும் சமூகத்தில் ஓர் ஒழுங்கு முறை இல்லாமல் போய் விட்டதைப் போன்றதொரு மாயையை மக்களுக்கு உருவாக்க முயல்கின்ற தன்மையை இது காட்டுகின்றது.

முன்னர் தமிழீழத்துக்குள் வந்துகொண்டிருந்த சில மஞ்சள் பத்திரிகைகளைப்போல வக்கிர உணர்வுகளைத் தூண்டி நிற்கும் செய்திகளை, ஆவலைத் தூண்டும் விதத்தில் வெளியிடுவதன் மூலம் பத்திரிகையின் விற்பனையைக் கூட்டலாம் என்பதும் ஒரு நோக்கமாக இருந்திருக்கிறது;

இவைகள் சமூகத் தீங்கானவை.

ஆகவே சமூகத்தின் எண்ண ஓட்டத்தை உருவாக்கும் சக்தியைக் கொண்ட பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியராக இருப்பதற்கான எல்லாத் தகுதிகளையும் தற்போதைய முரசொலி பிரதம ஆசிரியர் இழந்து நிற்கின்றார்.

இதற்கு முன்னரும் பல தடவைகள் முரசொலி பத்திரிகை பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டு வந்துள்ளது.

இவை குறித்து முரசொலி உரிமையாளருக்கும், பிரதம ஆசிரியருக்கும் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். கதைத்து பேசியிருக்கின்றோம்;

ஆனால் அத்தவறுகள் திருத்தப்படவில்லை.

அதன் தொடர்ச்சிதான் 10-04-1991 முரசொலி வெளியிட்ட உண்மைக்குப் புறம்பானதும், பொறுப்பற்றதுமான செய்தி வெளியீடும். இந்தச் செய்தியை தவறு என ஆசிரிய சமூகம் சுட்டிக்காட்டி இருந்தும் உடனடியாகவே மறுப்புச் செய்தியை வெளியிட்டு உண்மை நிலையை வெளியிடாததுடன் அத்தவறை நியாயப்படுத்தவும் முரசொலி பத்திரிகை முயன்றிருக்கின்றது;

எனவே மேற்குறித்த குற்றச் செயல்களுக்கான தண்டமாக 50,000 ரூபாவை முரசொலி உரிமையாளர் செலுத்த வேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளார்.

இப் பணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வரும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவைத்தில் சிக்கிக்கொண்ட

# 3,325 இலங்கையர்கள் பற்றி தகவல் ஏதும் தெரியாதாம்!

கொழும்பு, ஏப். 25

வளைகுடாப் போரின் போது குவைத்தில் சிக்கியிருந்த 3 400 இலங்கைப் பிரசைகளில் இதுவரை 75 பேர் மட்டுமே தேடிக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

எஞ்சிய 3 ஆயிரத்து 325 இலங்கையர் என்ன ஆனார்கள் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை என்று குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்டுபிடிக்கப்பட்ட இலங்கையர்கள் அனைவரும் சர்வதேச அமைப்பு ஒன்றின் உதவியுடன் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

தகவல் கிடைக்காத 3,325 இலங்கையர் பற்றிய விவரங்களை சேகரித்து அவர்களைக் கண்டு பிடிப்பதில் இலங்கைத் தூதரகம் தீவிரமாக ஈடுபட்டு உள்ளது என்றும் கூறப்பட்டது. [உ-எ]

# சவர்க்காரம் கொண்டுவர தடை எதுவும் இல்லையாம்!

யாழ்ப்பாணம், ஏப் 25

யாழ்ப்பாணத்துக்கு சவர்க்காரம் எடுத்துச் செல்வதற்கு தடை எதுவும் விதிக்கப்படவில்லை. வவுனியாவில் பயணிகளிடம் சவர்க்காரம் பறிமுதல் செய்யும் விடயம் எமக்குத் தெரியாது-

இப்படிக் கூறுகிறார் வடக்கு-கிழக்கு அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளர்.

கொழும்பில் இருந்துவரும் பயணிகளிடம் வவுனியாவில் வைத்து படையினர் சவர்க்காரம் பறிமுதல் செய்வது தொடர்பாக யாழ். செயலக அதிகாரிகள் வடக்கு-கிழக்கு அத்தியாவசிய சேவைகள் பணிப்பாளரிடம் முறையிட்டிருந்தனர்.

வடக்கே கொண்டு வருவதற்குத் தடை விதிக்கப்பட்ட பொருள்களில் சவர்க்காரமும் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளதா என்று யாழ். செயலக அதிகாரிகள் கேட்டசமயமே பணிப்பாளர் மேற்கண்டவாறு ஆச்சரியம் தெரிவித்தார்.

இது விடயம் சம்பந்தமாகத் தாம் சம்மந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாகவும் பணிப்பாளர் உறுதி அளித்துள்ளாராம். [அ-3]

## பஸ் விபத்தில் 19 பேர் பலி!

நேற்றுப் பிற்பகல் மஹியங்கனையில் இருந்து பாணந்துறைக்குச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று வலஸ்புர என்ற இடத்தில் செங்குத்தான பாதையில் இருந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 19 பயணிகள் கொல்லப்பட்டனர்.

அச்சமயம் பஸ்ஸில் சுமார் 50 பயணிகள் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது; [உ-எ]

# தவறியோருக்கு நாளை நிவாரணம்

யாழ்ப்பாணம், ஏப். 25

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைவத்தினால் வழங்கப்பட்டு வரும் இடம் பெயர்ந்தோருக்கான உலர்ந்த முறை நிவாரணத்தை ஏற்கனவே அறிவித்த திகதிகளில் பெறத் தவறியவர்கள் நாளை [வெள்ளி] காலை 9 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பலாலி இராணுவ முகாமை அண்டிய கிராமசேவையாளர் பிரிவுகளுக்கு கடந்த 13 ஆம், 23 ஆம் திகதிகளில் நிவாரணம் வழங்கப்பட்டது தெரிந்ததே;

அன்றைய தினங்களில் பெறத் தவறியவர்களுக்கே நாளை நிவாரணம் வழங்கப்படுகிறது. [ஒ]

# பம்பாய் வெங்காய விதைகள்

மானிப்பாய், ஏப்ரல் 25

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான பம்பாய் வெங்காய விதைகள் திருநெல்வேலியில் உள்ள யாழ்ப்பாண மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்தில் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறந்த விளைவு தரக்கூடிய தம்பூர். தாம்பூர இன பம்பாய் வெங்காய விதைகள் இங்கு வழங்கப்படுகின்றன: [இ-90]

# 'இரட்டை இலை' சின்னம் ஜெயலலிதாவுக்கே உரியது!

## தேர்தல் ஆணையாளர் தீர்வு

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு. க. தேர்தல் சின்னமாக 'இரட்டை இலை'யைப் பாவிப்பதை தடை செய்யும்படி சமர்பிக்கப்பட்ட மனுக்களை பிரதம தேர்தல் ஆணையாளர் திரு. டி. என். சேஷன் நிராகரித்து விட்டார்.

இம் மனுக்களை திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. க. — 2 கட்சியினரும் அ. தி. மு. க ஜானகி அணியின் சார்பில் முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியனும் சமர்ப்பித்து இருந்தனர்.

தமது கட்சியை அ. தி. மு. க. —2 என்று அங்கீகரிக்கும்படியும் குடை அல்லது சைக்கிள் சின்னத்தைத் தமக்கு ஒதுக்கும் படியும் திருநாவுக்கரசு சமர்பித்த இன்னொரு மனுவும் பிரதம தேர்தல் ஆணையாளரால் நிராகரிக்கப்பட்டது.

அ. தி. மு. க. ஜானகி அணியை அகில இந்திய ரீதியான கட்சியாக அங்கீகரித்து கடந்த சட்டசபைத் தேர்தலில் பாவிக்கப்பட்ட 'இரட்டைப் புறா' தேர்தல் சின்னத்தை மீண்டும் ஒதுக்கும்படி திரு பாண்டியன் சமர்பித்த இன்னொரு மனுவையும் தேர்தல் ஆணைக்குழு நிராகரித்து விட்டது. [ஒ-எ]

# குர்டிஷ் தலைவர்களுடன் சதாம் பக்தாத்தில் பேச்சு!

லண்டன், ஏப். 25

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேன் தலைநகர் பக்தாத்தில் நேற்று குர்டிஷ் கிளர்ச்சித் தலைவர்களைச் சந்தித்தார் என்று பி. பி. ஸி. அறிவித்தது.

ஈராக்கியத் தலைவர்கள் பக்தாத்தில் கிளர்ச்சிக்காரர்களுடன் பேச்சு நடத்துவதை ஈராக் அரசு அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியிருப்பது இதுவே முதற்தடவையாகும்; [ஒ-5]

# குவைத்தில் அமெரிக்க தளம்

குவைத்நகரம், ஏப்ரல் 24

குவைத்தில், அமெரிக்க இராணுவத் தளம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக குவைத் எமிர் அல்சபா விடுத்தவேண்டுகோளை அமெரிக்கா ஏற்றுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் முடிவை அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் குவைத்தில் வைத்து எமிருடன் நடத்திய பேச்சுக்களின் போது வெளியிட்டார். ஈராக்கிடமிருந்து எதிர்காலத்திலும் தமது நாட்டைப் பாதுகாக்க அமெரிக்க இராணுவத் தளம் அமைக்கப்பட வேண்டும் என்று எமிர் அல்சபா கோரியிருந்தார்.

தற்போது குவைத்தில் 20 ஆயிரம் அமெரிக்கத் துருப்புகள் நிலை கொண்டுள்ளன;

இராணுவத் தளம் அமைக்கப்படும் போது அங்கு குறிப்பிட்ட எண்ணிக்கையான அமெரிக்க துருப்புகள் நிரந்தரமாக தங்கும் என்று கூறப்படுகிறது. [இ-எ]

# இலங்கைப் பெண்கள்மீது குவைத்தில் மானபங்கம்

## ஆயுத பாணிகள் அட்டகாசம்

வாஷிங்டன், ஏப் 25

குவைத்திலுள்ள இலங்கைப் பெண்களையும், பிலிப்பீன்ஸ் பெண்களையும் ஆயுதம் தாங்கிய குவைத்தியர்கள் பலவந்தமாக பாலியல் உறவில் ஈடுபடுத்துவதாக ''வாஷிங்டன் டைம்ஸ்'' செய்தி வெளியிட்டுள்ளது.

ஈராக்கின் பிடியிலிருந்து குவைத் விடுதலையான பின்னரே அங்கு பெரிய அளவில் இத்தகைய மானபங்கச்செயல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் —

சீருடை அணிந்த காடையர்களிடம் இருந்து பெண்களைப் பாதுகாக்க விசேட பொலிஸார் அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத் விடுதலைக்குப்பின் குறைந்தது 50 பிலிப்பீன்ஸ் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டிருப்பதாக ஒரு மதிப்பீடு தெரிவிக்கிறது. [ஒ-3]

## மரண அறிவித்தல்கள்

### கா. கிருசாந்தினி, கா. பிரதீபன்

பருத்தித்துறையைச் சேர்ந்த விநாயக முதலியார் வீதியில் வசித்து வந்த க. காண்டீபன் – செல்வரஞ்சினி தம்பதிகளின் புதல்வர்களாகிய கா. கிருசாந்தினி [வயது 5], கா. பிரதீபன் [வயது 3] ஆகிய இருவரும் இத்தாலி நாட்டிற்கு அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில் பனிப்புயல் காரணமாக மரணத்தைத் தழுவிக் கொண்டனர் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தாழ்மையுடன் அறியத் தருகிறோம்.

தகவல்:
குணசேகரம்

ஐஸ் தொழிற்சாலை வீதி,
கற்கோவளம்,
பருத்தித்துறை. [16587]

### கணபதி அண்ணாமலை

[சண்டிலிப்பாய்]

வைரவர் கோவிலடி சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த கணபதி அண்ணாமலை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னமாவின் அன்புக் கணவராவார். பூதவுடல் தகனக் கிரிகைக்காக 25-04-91 இன்று வியாழன் பிற்பகல் 1 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

தகவல்:
மனைவி, பெறாமக்கள் [16518]

### திரு. அ. நடராசா

[உப. அதிபர் ப. மெ ம. வி]

பண்ணாகம் திரு, அப்பாப்பிள்ளை நடராசா உப அதிபர் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம் [23 4 - 91] செவ்வாய்க்கிழமை காலமானார். இவர் ஆனந்தீஸ்வரியின் அன்புக் கணவரும், அருந்ததி [பிரான்ஸ்], சுமதி, சபேசன் [பிரான்ஸ்], கணேசன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம். [16517]

## தந்தையை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தெரிவித்தார்.

அவர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது.

எதிர்கால அரசியலில் ஜெயவர்த்தனாக்களுக்கு இனித் தேவையே இல்லை.

### எதிர்த்தேன்

எனது தந்தை ஜே. ஆர். இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவுடன் செய்து கொண்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நான் எதிர்த்தேன். ஆனால் எனது எதிர்ப்பை செயலில் காட்டவில்லை.

இலங்கைக்கு இந்திய இராணுவம் தேவை இல்லை என்ற காரணத்திற்காக எதிர்த்தேன்.

அந்த ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்கில் எமது கட்டுப்பாடு இல்லாமற் போய் விடும் என்று நான் உணர்ந்தேன். தீவிரவாதிகளின் பிடியில் வடக்கு - கிழக்கு மாகாணம் சிக்கிவிட ஒப்பந்தம் உதவும் என்று நான் எண்ணினேன்.

இந்திய இராணுவத்தினால் சிங்கள கிராமங்கள் தாக்கப்படும் என்று நான் அறிந்தேன்.

இக் காரணங்களை நான் என் தந்தையாரிடம் கூறினேன். இப்படியொரு நெருக்கடியை இந்திய இராணுவத்தின் வருகை ஏற்படுத்தும் என்று எனது தந்தை அந்தக் கட்டத்தில் உணரவில்லை. நான் கூறியதன் உண்மையை எனது தந்தை பின்னர் உணர்ந்துகொண்டார்.

நாட்டில் உள்ள எந்த அரசியல்வாதி மீதும் எனக்கு அபிமானம் கிடையாது.

சிங்கப்பூர் போன்று இலங்கை வளர்ச்சி அடையவில்லை, 1948 இல் சுதந்திரம் அடைந்த போது இருந்த மாதிரியே இலங்கை இன்னும் இருக்கிறது. இதற்குக் காரணம் நமது அரசியல் வாதிகள் தான்.

கேள்வி: அப்படியானால் உங்கள் தந்தை......

பதில்: இந்த நாட்டின் அனைத்து அரசியல் வாதிகளும் என்று கூறினேன், என்று பதில் தெளிவானது. [அ-எ]

## திட்டமிட்டபடி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணத்தையும் வன்னிப் பகுதியையும் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்திருக்க வேண்டும். அதன் பின்னர் யாழ்ப்பாணம் மீதான இராணுவ நடவடிக்கை ஏப்ரலில் ஆரம்பமாகி ஜூனில் முடிவடைந்திருக்கவேண்டும்.

ஆனால் திட்டப்படி இராணுவ நடவடிக்கைகள் இடம் பெறவில்லை.

75 ஆயிரம் படையினர் இருந்தாலும் தளபதி ஹமில்டன் வணசிங்காவின் புதிய கால அட்டவணையின் படி இலகுவில் சண்டையை முடிவுக்குக் கொண்டுவர முடியாது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் இப்போது ஒப்புகொண்டுள்ளன.

ரஞ்சன் விஜேரத்தினா உயிருடன் இருந்தபோது ஆயுதப் படையினரின் எண்ணிக்கையை ஒரு லட்சமாக அதிகரிக்கத் திட்டமிட்டிருந்தார்.

தற்போது ஏற்பட்டுள்ள அவசர சூழ்நிலையில் அது சாத்தியப்படாத ஒன்று என்று கருதப்படுகிறது: அதன் காரணமாக இருக்கும் படையினரைக் கொண்டே இராணுவ நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரும்படி லெப்டினன்ட் ஜெனரல் வணசிங்காவுக்கு அரசுத் தலைமைப் பீடம் கூறிவிட்டது.

இதனிடையில்—

வடக்கு-கிழக்கு சண்டையை முடிக்க அரசு வழங்கிய 6 மாதக் காலக்கெடு எதிர்வரும் ஜூனுடன் முடிவடைகிறது.

ஆனால் அந்தக் காலக்கெடுவுக்குள் இராணுவத் தீர்வு வெற்றியளிக்காவிட்டால்—

தற்போது இந்தியாவுக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்பட்டிருக்கும் மூத்த ராஜதந்திரியான நெவில் கனகரத்தினாவின் திறமையை, திரு. காந்தியையும் இந்தியாவையும் தன் பக்கம் இழுக்க இலங்கை அரசு பயன்படுத்தும்.

— இவ்வாறு அக் கட்டுரையில் விவரிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org